முருகப்பெருமான் துணை

**மகான் உமாபதிசிவாச்சாரியார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.05.2023**, வியாழக்கிழமை

1. கலியுகத்தில் மாற்றம் செய்ய
   கந்தப் பெருமான் சக்தியாக
   அழியாமை உலகோர்க்கு அருள
   அவதாரம் எடுத்த அரங்கஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் சோபகிருது தகர்திங்கள்
   இனிமைபட எழுநான்குதிகதி குருவாரம்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 28 ம் நாள், 11.05.2023, வியாழக்கிழமை)
   இயம்பிடுவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை உமாபதிசிவாச்சாரியாரும்
   அகிலம் பாதுகாப்புற உரைப்பேன்
   ஆசிதந்து மக்களை நோக்கி
   அரங்கன் தருகின்ற வழிகாட்டல்
4. வழிகாட்டல் சாமானியர்தனையும்
   வல்லமையுள்ள நிலைப்படுத்தி
   அழியாமை பெரும் வண்ணமாக
   ஆற்றல்மிக்க சரவணசோதி
5. சோதிவழிபாடுதன்னை இனிதே
   செகமெல்லாம் மக்கள் செய்ய
   ஆதிநாதன் அருளும் பலமும்
   அனுகூலமும் கிட்டி நிலைப்பாரென
6. என அருள் வழி காட்டிடும்
   இணையில்லா ஞானவழியே
   தினமும் வேதாந்தமாக மக்கள்
   தொடர்ந்து ஏற்று வருதலுற
7. வருகவே அவரவர் வாழ்வில்
   வளர்ச்சி நிலையாக சடுதி
   தருமகுணமும் தயவும் கூடி
   தலைவன் முருகனின் காட்சி கிடைக்க

8. கிடைக்கும் வண்ணம் சிறப்பறிவு
குருவருளாகப் பரவி வந்து
தடையின்றி ஞான சித்தி
தவத்தால் கிட்டும் அனைத்து

9. அனைத்து சக்திகளும் கிட்டி
அழியாமைதனை அனைவரும்
துணைபட அரங்கமகானின்
தெரியவே ஆசியால் அடைவர்

10. அடைந்திட இந்தப் பேருலகம்
ஆபத்தான மாயை கடந்து
சோடையான அழிவை வென்று
சுபிட்சமும் வளமும் பாதுகாப்பும்

11. பாதுகாப்பும் அடைதல் காண்கும்
பண்பானவர்கள் ஆளுமையும்
பாதுகாப்பாய் கிட்டி இனிதே
பாருலகம் ஞான உலகமாகும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—